1979 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது இடப்பட்டுள்ள உத்தரவின் அடிப்படையில், இந்த இரண்டும் இணைக்கப்படவில்லை. தனித் தனியாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சட்டத்தை மீறக் கூடாது.

சாத்தனூர் அணை ஆயக்கட்டு பகுதியில் வரி வசூல்.

குறுகிய கால வினா எண். 27—திரு. கோ. ரகோத்தமன் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோயிலூர் வட்டம், சாத்தனூர் அணை ஆயக்கட்டில் உள்ள 11 கிராமங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் சனவரி மாதத்திலேயே அதற்கான நில வரியையும் வசூலிப்பதால் மேற்படி கிராம பொது மக்கள் வரி கட்டமுடியாமல் அவதிக்குள்ளாகின்றார்கள் என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் ஏப்ரலில் வரி வசூல் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் வட்டத்தைச் சேர்ந்த 11 கிராமங்கள் சாத்தனூர் அணைக் கட்டிலிருந்து விடப்படும் தண்ணீரினால் பயன் அடைகின்றன. வருவாய் வாரிய நிலை ஆணையின்படி, தென்னாற்காடு மாவட்டத்தின் வரி வசூல் காலம் சனவரியிலிருந்து ஏப்ரல் வரையாகும். சம்பந்தப்பட்ட கிராம விவசாயிகள் இந்த வரி வசூல் காலத்தை ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கு மாற்றும்படி கோரியுள்ளனர். அவர்களது கோரிக்கையை மாவட்ட ஆட்சியர் ஆய்ந்து வருகிறார். வருவாய் வாரியத்தின் மூலம் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பரிந்துரை வந்ததும் அரசு தக்க ஆணை பிறப்பிக்கும். தற்போது இந்த கிராமங்களில் வரி வசூலில் கெடுபிடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோயிலூர் பகுதியிலே இந்தத் தண்ணீர் பயன்படுத்தி அந்தப் பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் விரைவிலே அறிவிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. விரைவிலே என்றால், எவ்வளவு காலத்தில் என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

[1979 மார்ச் 27

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் அங்கே இருக்கக் கூடிய விவசாயிகளின் சங்கடத்தைப் பற்றி பல முறை நேர்முகமாகவும், மனுக்கள் மூலமாகவும், முறையிட்டிருக்கிறார். அந்த முறையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுடைய எண்ணங்களைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் நல்ல முறையிலே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணிப் பார்த்து அரசு, ஜனவரி மாதம் வசூல் பண்ணுவதை ஏப்ரல் மாதம் வரை கால தாமதமாக வசூலிப்பதற்குத் தற்காலிகமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது ஆகவே, இரண்டு மாதங்களுக்கு வசூல் செய்வதை இந்த அரசு தள்ளிப்போட்டிருக்கிறது. இப்போது வசூல் செய்வது கடுமையாக்கப் படவில்லை என்பதையும், மக்களுடைய எண்ணத்தையும், உறுப்பினர் ரகோத்தமன் அவர்கள் எண்ணமும் நிறைவேற்றப்படும் என்பதற்கு உறுதி அளிக்கிறேன்.

மேலா நல்லூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள்.

குறுகிய கால வினா எண். 28—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மாயூரம் ஒன்றியம் (மேலாதனூர்) மேலாநல்லூர் பஞ்சாயத்தில் நந்தனார் பிறந்த இடம் என்ற வகையில் அவர் வாழ்ந்த பகுதியில் அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் 27 குடும்பத்தினருக்கு அரசு இலவச வீடுகள் கட்டித் தந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அந்தக் கட்டிட வேலைகள் முழுவதும் முடிவு பெற்றுவிட்டதா ?

(இ) முடிவு பெறவில்லை என்றால் அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :

(அ) மாயூரம் ஒன்றியம் (மேலாதனூர்) மேலாநல்லூர் பஞ்சாயத்தில் நந்தனார் பிறந்த இடம் என்ற வகையில் அவர் வாழ்ந்த பகுதியில் அங்குள்ள தாழ்த்தப்பட்டவர்கள் 27 குடும்பத்தினருக்கு அரசு இலவச வீடுகள் கட்டித்தரவில்லை.

(ஆ) மற்றும் (இ) : கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு'' என்பதற்கேற்ப இந்தக் கேள்வியை தாங்கள் அனுமதித்து, இங்